# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,103 — 1935 ம் ஆண்டு மாசிமீ 8 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

அரசாட்சியாரின் விளம்பரம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியா பரிபாலன கட்டளைச் சட்டத்தின் 25 (1) ம் பிரிவின்படி இரத்தினபுரி அபிறை வருமானப் பிரிவுக்குரிய வித்தியாபரிபாலன சபையாரால்செய்யப்பட்டு வித்தியாசங்கத்தின் அங்கீகாரம் பெற்ற ஒழுங்குச்சட்டத்தின் 25 (5) ம் பிரிவின்படியும் 1931 ம் ஆண்டின் இலங்கை மந்திர ஆலோசனைச்சபைச் சட்டத்தின் 93 ம் பிரிவிற் குறித்துள்ள அதிகாரப்படியும் உத்தமஞர் தேசாதிபதி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதிகள்.

சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர,
கல்விமந்திரி.

கல்விமந்திரி கந்தோர்,
கொழும்பு, 1935 ம் ஆண்டு பெப்ரவரிமீ 6 ந் திகதி.

உபவிதிகள்.

1\. (1) சபையின் ஓர் சாதாரணமான கூட்டம், அக்கூட்டம் நடைபெறுதற்கென நியமிககப்பட்ட திகதிக்கு முன்னர் ஒரு கிழமைக்குக் குறையாமல், அக்கூட்டம் போதிய அலுவல்கள் இல்லாததால் நடைபெருமனும் அல்லது அறிவித்தலில் கொடுக்கப்பட்ட வேறு திகதியில் நடைபெறுமென தலைவரால் அங்கத்தவர்கட்கு எழுத்துமூலம் அறிவித்தாலன்றி, பெப்ரவரி ,ஏப்பிரல், ஜூன், ஆகஸ்டு, ஒக்டோபர், டிசெம்பர் மாசஙகளில் மூன்முந் திங்கட்கிழமை நடைபெறும்.

(2) தலைவர், நடத்தவேண்டிய அலுவல்களின், தன்மையைக் குறித்து எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்து ஓர் விசேஷ கூட்டத்தைக் கூட்டலாம். ஆனால் அவ்வித அறிவித்தல், இக்கூட்டம் நடைபெறுவதற்கென நியமிக்கப்பட்ட திகதிக்குமுன்னர் ஒரு கிழமைக்குக் குறையாமல் அங்கத்தவர்கட்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) தலைவர், ஒவ்வொரு கூட்டத்தின் நடபடிக்கைகளையும் அவைகள் நடந்த வரிசைப்படியே ஓர் குறிப்புப் புத்தகத்தில் வரைவர். அக்கூட்டத்திற்குப் பின்னர் கூடிய கெதியில் நடபடிக்கைக் குறிப்புகளின் பிரதியை ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் அனுப்புவிப்பர்.

2\. (1) இங்கு A அட்டவணையில் விபரிததிருக்கும் பகுதிகள் வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள் மூலமாய் பிரதம கல்விக்காகத் தகுந்த ஒழுங்கு செய்யப்பட்ட பகுதிகளாமென இத்தால் பிரசித்தப்படுத்தப் படுகின்றது.

(2) இவ்வுபவிதிகளின்படி "பாடசாலை" யென்னும் பதம் வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது இனிமேல் அங்கீகரிக்கப்படும் இப்பிரிவிலுள்ள பாடசாலைகளில எந்தப் பாடசாலையையும் கருதும்.

3 இவ்வித்தியாபரிபாலனப் பிரிவிற்குள் :—

(a) ஆறு வயசுக்குக் குறையாத, பதினுலு வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுவனின் பெற்ருேரும் ;

b) ஆறுவயசுக்குக் குறையாத, பன்னிரண்டு வயசுககுக் கூடாத, ஒவ்வொரு சிறுமியின் பெற்ருேரும்; அச்சிறுவன் அல்லது சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்கு செய்திருந்தாலொழிய; அல்லது இச்சபைத்தலைவர், அச்சிறுவனை அல்லது அச்சிறுமியை வறுமை அல்லது நோய் காரணமாக பாடசாலைக்குப் போவதிலிருந்து நீக்கினுலொழிய, அச்சிறுவனை அல்லது அச்சிறுமியை பாடசாலைக்குப் போகச் செய்விப்பது அப்பெற்ருேரின் கடமையாகும்.

ஆயின், (a) பத்து வயசுக்கு மேற்படாத முஸ்லீம், தமிழ் சிறுமிகள் ; அல்லது

(b) ஒழுங்குச்சட்டத்தில் விதிக்கப்பட்ட நான்காம் வகுப்புப் பரீட்சையில் வாசினை, எழுத்து, கணிதம் என்பவற்றில் சித்திபெற்றதாக வித்தியாதரிசியின் பத்திரம் வைத்திருந்து தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழிலில் அமர்ந்துள்ள பதினுலு வயசுக்குக் கீழ்ப்பட்ட எந்தச் சிறுவனும் அல்லது பன்னிரண்டு வயசுக்குக் கீழ்ப்பட்ட எந்தச் சிறுமியும் ; அல்லது

(c) எட்டு வயசுக்குக் கீழான எந்தச் சிறுவனுவது அல்லது எந்தச் சிறுமியராவது தனது வீட்டில் அல்லது வாசஸ்தலத்திலிருந்து ஒரு கட்டை தூரத்திற்கப்பாலுள்ள, அல்லது எட்டு வயசுககு மேலான எந்தச் சிறுவனுவது தனது வீட்டில் அல்லது வாசஸ்தலத்திலிருந்து அதிகம் கிட்டிய பாதையால் இரண்டு கட்டை தூரத்திற்கப்பாலுள்ள எந்தப் பாடசாலைக்காவது, போகவேண்டுமென்ற கட்டாயமில்லை.

4\. (1) இவ்வுபவிதிகளின்பொருட்டு, எந்தப் பிள்ளையினதும் நாளாந்த வரவுக்காலம், சமான வயசுள்ள பிள்ளைகளின் படிப்புககாகப் பாடசாலை நாளாந்தம் திறந்திருக்கும் முழு நேரமாகும். என்ருலும் 15 (2) ம் பிரிவில் ஏற்படுத்தியபடி சமயபாடம் படிப்பிக்கும் நேரத்தில் எந்தப் பிள்ளையாவது வராமல் விடலாம்.

5. இவ்வுபவிதிகளின் உட்பிரிவுகளை அனுசரிக்கத் தவறும் எந்தப் பெற்றோரும் 5 ரூபாவுக்கு மேற்படாத தெண்டமிறுத்தற்கும் தொடர்ச்சியான குற்றமாகில் இரண்டாம் நாளுக்கும் குற்றம் தொடரும் பின்னருள்ள நாள் ஒவ்வொன்றிற்கும் 1 ரூபாவுக்கு மேற்படாத குற்றத்திற்கு மாளாவர்.

6. பின்வரும் உபவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன:—

1927 ம் ஆண்டு நொவெம்பர்௴ 4 ௳ திகதியைக்கொண்ட 7,613 ம் இலக்க அரசினர் "கெசெற்" பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பட்ட 1927 ம் ஆண்டு ஒக்டோபர்௴ 29 ம் திகதி யிடப்பட்ட இரத்தினபுரி அரசிறைவருமான பிரிவுக்குரிய வித்தியாபரிபாலன சபையாரால் செய்யப்பட்ட உபவிதிகள்.

1026 ம் ஆண்டு மார்ச்சு௴ 26 ௳ திகதியைக்கொண்ட 7,518 ம் இலக்க அரசினர் கெசெற் பத்திரிகையில் பிரசுரஞ்செய்த 1926 ம் ஆண்டு மார்ச்சு௴ 20 ௳திகதி யிடப்பட்ட இரத்தினபுரி நகர வித்தியா பரிபாலன சங்கத்தாரால் செய்யப்பட்ட உபவிதிகள்.

1929 ம் ஆண்டு ஒக்டோபர்௴ 8 ௳ திகதியைக்கொண்ட 7,741 ம் இலக்க அரசினர் கெசெற் பத்திரிகையில் பிரசுரஞ்செய்த மேற்கூறிய உபவிதிகளின் திருத்தப்பட்ட 7 ம் உபவிதி.

A அட்டவணை.

முற்கூறிய உபவிதிகளில் சொல்லிய பகுதியின் விபரம்.

| | |
|---|---|
| 1. உடப்பற்று .. <br> 2. மெடப்பற்று .. <br> 3. பல்லேப்பற்று .. | குறுவிற்றிக்கோறளை |
| 4. உடப்பற்று .. <br> 5. மெடப்பற்று .. <br> 6. பல்லேப்பற்று .. | நவதுங்கோறளை |
| 7. உடப்பற்று .. <br> 8. மெடப்பற்று .. <br> 9. பல்லேப்பற்று .. | குக்குல்கோறளை |
| 10. பன்னில்பற்று .. <br> 11. மெடப்பற்று .. <br> 12. கடவல்பற்றும் தம்பகம் பற்றும் .. | அற்றகலன்கோறளை |
| 13. கொலன்னகம்பற்று .. <br> 14 தியப்பொற்றகம்பற்று .. | கொலன்னகோறளை |
| 15. சொலாயுடபலாத்தை .. <br> 16. கெலாபல்லேபலாத்தை .. | மெடக்கோறளை |
| 17. தலப்பிற்றகம்பற்று .. <br> 18. உடவகம்பற்று .. | கடவத்தைக்கோறளை |

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது ம் பிரிவின் 7 பிரகாரம் உடுவாவலையில் ஓர் புதிய சுயபாஷைக் கலவன் பாடசாலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 175. குறிச்சி.—உடுவாவல, குறுகமசெகியபத்து, கரிஸ்பத்து, கண்டி டிஸ்திறிச், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | போககாகொட்டுவவத்த .. | தோட்டம், 35 வயசுள்ள 16 தென்னமரமும், 10–20 வயசுள்ள 1 சாபு, 2 கொக்கோ, 1 ஜம்பு, 35 கமுகுமரங்களும், ஒரு நிலையற்ற வேய்ந்த பாடசாலையும், கக்கூசும் உள்ளது | உடுவாவலை, குருவை, சுமனஸ்தாவிர | 0 3 22·2 |
| 2 | ஷை .. | தோட்டம், 5 வயசுள்ள 1 தென்னமரமும், 5–10 வயசுள்ள 32 கமுகும், 5–25 வயசுள்ள 15 பிலாமரங்களும், 5–15 வயசுள்ள 42 கொக்கோமரங்களும், ஒரு நிலையற்ற வேய்ந்த குடிசையும் இருக்கு | உடுவாவலை, குருவை, சுமனஸ்தாவிர, வட்டுவலயிலிருக்கும் வீயன்னலாகெதர கீன்பண்டாவானும், குணயாவானும் மறுத்து உரித்தாடப்படுகிறது | 0 0 24·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (மார்ச) பங்குனி மாசம் 9 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு உடுவாவல பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1935 ம் ௵ (ஜனவரி) தை௴ 31 ௳.

டி. சீ. ஆர். குணவார்தன,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சம்மாந்துறையில் பெண்பாடசாலைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமப்படத்து இல. A 185. குறிச்சி—சம்மாந்துறை 3 ம் குறிச்சி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பனையடிவளவு (அசெஸ்மென்ற் இலக்கங்கள் 126, 127A, 127B, 127C) | வெண்நிலம் .. | சம்மாந்துறை 3 ம் குறிச்சி ஏ.வீ.வீ.வீ. ஆதம்லெப்பையும், எம் ஆதம்லெப்பையும், ரீ. செய்நம்புவும் சொரியலாக | 0 0 27·3 |
| 2 | கொலுன்டாடி வளவு (அசெஸ்மென்ற்) இலக்கம் 132) | 2 வெற்றிலைக்கொளுந்தும், 8 வயதுள்ள ஒரு தென்னைமரமும், ஒரு மண்வீடுமுள்ள தோட்டம் | சம்மாந்துறை 3 ம் குறிச்சி பக்கீர் முகையதீன் சின்னஆசியா | 0 0 8·8 |
| 3 | பனையடிவளவு (அசெஸ்மென்ற் இல. 133) | 10 தொடக்கம் 30 வயதுள்ள 2 பனையும், ஒரு தென்னையும், 2 மண்வீடுகளுமுள்ள தோட்டம் | சம்மாந்துறை 3 ம் குறிச்சி, மீராலெவ்வை போடிமுகமது இஸ்மெயில் மரைக்காயர் | 0 0 19·7 |
| 4 | பூவரசையடிவளவு (அசெஸ்மென்ற இல. 125) | வெண் நிலம் .. | சம்மாந்துறை 3 ம் குறிச்சி இஸ்மெயில் லெவ்வை சுலைமா லெவ்வை | 0 0 11 |
| 5 | பூவரசையடிவளவு (அசெஸ்மென்ற இல. 124) | 4 வயதுள்ள ஒரு தென்னையும் ஒரு மண்வீடுமுள்ள தோட்டம் | சம்மாந்துறை 3 ம் குறிச்சி, அசனார் ஜெநம்பு | 0 0 9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1935 ம் ஹூ (மார்ச்) பங்குனி மாசம் 13 ந் தேதியிலன்று மாலை 3 மணிக்கு சம்மாந்துறை வன்னியனார் கந்தோரில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1935 ம் ஹூ (ஜனவரி) தைமீ 31 ந் உ.

சீ. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அக்கரைப்பற்றில் பனங்காடு என்னும் கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடத்திற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 186. குறிச்சி—பனங்காடு.

| காணியினது துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிள்ளையார் கோவில் வளவு | 25 வயதுள்ள ஒரு தென்னைமரமுள்ள ஒரு வம்மிமரமும், ஒரு பாழடைந்த கோவிலும் உள்ள தோட்டம் | பனங்காடு பிள்ளையார் கோவில் பராபரிப்புக்காரர் | 0 | 1 | 22·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (மார்ச்) பங்குனி மாசம் 14 ந் தேதியிலன்று மாலை 3 மணிக்கு அக்கரைப்பற்றுக் கிராமக்கோட்டில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1935 ம் ஹூ (ஜனவரி) தைமீ 31 ந் உ.

சீ. சிற்றம்பலம்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

மட்டக்களப்பு உப்புக் குதத்திலிருந்து அக்கரைப்பற்று உப்புக்குதத்துக்கு 1,500 அந்தர் உப்பும் பொத்துவில் உப்பு குதத்துக்கு 450 அந்தர் உப்பும், 1935 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதிக்கும், 1936 ம் ஆண்டு சித்திரை மாதம் 30 ந் திகதிக்கும் இடையில் கொண்டுபோய் ஒப்புக்கொடுப்பதற்கு கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும். உப்புக் குதம் கொள்ளக்கூடிய அளவுக்கடக்கமாக அந்தந்த நேரங்களிலும் அக்குதம் கொள்ளக்கூடிய தொகையுமாக உப்பு கொண்டுபோய் ஒப்புக்கொடுக்க வேண்டியது.

2. குறித்த குதத்திற்கு ஒரு அந்தர் நிறுத்து அடுக்குஞ் செலவுசேர்ந்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்படவேண்டும்.

3. கேள்விக்கடதாசியின் உறை இடப்பக்க மூலையில் "உப்பு ஏற்றக் கேள்விக்கடதாசி" என்று எழுதப்படல் வேண்டும். கேள்விக்கடதாசிகள் கிழக்கு மாகாண மட்டக்களப்பு ஏசன்று கந்தோரில் 1935 ம் ஆண்டு பங்குனி மாதம் 12 ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும்.

4. கேள்விக் கடதாசிகள் போமில் எழுதியிருக்க வேண்டும். போம் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம் குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்போம் பெறுவதற்கு ரூபா 20 எந்தக்கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றால் அல்லது சரியான தத்துவம் பெற்ற அவரின் பதிலாலால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தி லறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒபந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூபா 20 அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத் தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளிற் தவறு செய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மான மில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக்கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்டதன்மேல் கட்டிய ரூபா 20 திரும்பக் கொடுக்கப்படும்.

6. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள் மேல்விலாசங்கள் கொடுக்கும் இரண்டுதக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக்கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் காசு ரூபாய் 450 (அதாவது அக்கரைப்பற்றுக்கு ரூபாய் 300 ம் பொத்துவிலுக்கு ரூபாய் 150 ம்) பிணை கட்டவேண்டும்.

8. கிழக்கு மாகாண ஏசன்றுக்குக் கேள்வி அனுப்பும் போதே அக்கேள்வியின் கொப்பி ஒன்று கேள்விக்காரனால் தபால்மூலமாய் அரசினரின் நிரசசாஸ்திர நிபுணரும் உப்பு அமைத்திருக்கும் (Government Mineralogist and Salt Adviser, Colombo) அனுப்பப்படல் வேண்டும்.

9. நியமிக்கப்பட்ட கழிவுக்குமேல் ஏதாவது குறையிருக்குமானால் ஒரு அந்தருக்கு ரூபாய் மூன்று சதம் 36 (முப்பத்தாறு) வீதம் கொந்திறுத்துக்காரன் கட்டவேண்டும்.

10. வேறு தேவையான விளம்பரங்கள் மட்டக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

11. அரசாட்சியார் ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒன்றித்தும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்படமாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் அழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசென்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களை நிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கபடாது.

12. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது. கேள்விகளிலொன்றை அல்லது எல்லாவற்றையுங் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

ஜோ. இ. ஞானமுத்து,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றுக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1935 ம் ஆண்டு மாசிமீ 1 ந் திகதி.

---

நிலாவெளி உப்புக் குதத்திலிருந்து மட்டக்களப்பு உப்பு குதத்திற்கு 24,000 அந்தர் சொரியல் உப்பு, 1935 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதிக்கும் ஆடி மாசம் 31 ந்திகதிக்கு மிடையில், அதாவது 8,000 அந்தர் வைகாசி மாசம் 31 ந் திகதிக்கு முன்னும், 8,000 அந்தர் ஆனி மாசம் 30 ந் திகதிக்கு முன்னும், மீதி 8,000 அந்தர் ஆடி மாசம் 31 ந் திகதிக்கு முன்னுமாய்க் கொண்டுபோவதற்குக் கேள்விக்கடிதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நிலாவெளியிலிருந்து ஒரு அந்தர் நிறுத்து அடுக்குச் செலவு சேர்த்து என்ன வீத கூலிக்கு ஏற்றக் கூடுமென்று கேள்விக்கடிதாசியில் காட்டப்பட வேண்டும்.

3. எல்லா ஒப்பப்பத்திரங்களும் இரண்டு காப்பிகளில் எழுதப்பட்டும், முத்திரையிடப்பட்டு பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

ஒப்பப்பத்திர சங்கத்தலைவர்,
(Chairman of the Tender Board),
அரசினர் பொக்கிஷ சாலை,
(தபால்பெட்டி நொ. 500),
கொழும்பு.

4. ஒப்பப்பத்திரங்கள் அரசினர் பொக்கிஷ சாலையில் அதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்பட வேண்டும். தபால் மூலமாய் அனுப்பும்பொழுது பதிவு கடிதமூலமாய் அனுப்பப்படல் வேண்டும்.

5. கேள்விக்கடுதாசியின் உறை இடப்பக்க மூலையில் "நிலாவெளியிலிருந்து மட்டக்களப்புக்கு உப்பு ஏற்றக் கேள்விக்கடுதாசி" யென்று எழுதப்படல் வேண்டும். கேள்விக் கடுதாசிகளை 1935 ம் ஆண்டு பங்குனி மாசம் 12 ந் திகதி, செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்கு பிந்தாமல், ஒப்பப்பத்திர சங்கத்தலைவரிடம் சேர்க்கப்படல் வேண்டும்.

6. கேள்விக்கடுதாசிகள் போமில் எழுதப்படல் வேண்டும். அப்போம் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. ஒப்பப்பத்திரங்களிலுள்ள எல்லா மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் ஒப்பப்பத்திரகாரரின் தலையெழுத்துக்களால் அத்தாட்சி படுத்தப்படல் வேண்டும்.

8. கேள்விப்போம் பெறுவதற்கு ரூபாய் 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தில் அறிவித்தல் பெற்ற பத்து நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதி முடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணை கொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூபா 50 ம் அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத்தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளில் இனிச்சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக்கூடியவரா யிருப்பார். ஒப்பந்தத்திற்குக் கையொப்பமிட்டதின்மேல் கட்டிய ரூபாய் 50 திரும்பக் கொடுக்கப்படும்.

9. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்கு பிணைகாரராய் வருவோமென்று சம்பந்தஞ்சொல்லித் தங்கள் மேல்விலாசங்களை கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக்கடுதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

10. ஒப்பந்த வேலை சரிவர நிறைவேற்றுவதற்காய் கொடுக்கும் உறுதியில் போதிய பிணைகாரர் சேரல் வேண்டும். ஆயிரம் ரூபாய் (1,000) பிணை கட்டப்படவேண்டும். வேறு தேவையான விளம்பரங்களும் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

11. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்பட மாட்டாது.

12. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட எதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்படமாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் எதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசன்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி நிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

13. கேள்விகளிலொன்றை அல்லது எல்லாவற்றையுங் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

ஜோ. இ. ஞானமுத்து,
கீழ்மாகாண அரசாட்சி ஏசண்றுக்காக

மட்டக்களப்புக் கச்சேரி,
1935 ம் ஆண்டு மாசிமீ 1 ந் திகதி.

---

## றோட்டைத் தடுத்தல்.

கொலனுவையிலுள்ள எண்ணெய்க்குத வளவுக்கூடாகப் போகும் தனிப்பாவிப்பு றோட்டு, நிகழும் 1935 ம் ஆண்டு மார்ச்சுமீ 1 ந் திகதியன்று கால் நடைப் பிரயாணிகளும் வண்டிகளும் அதன் மீது போகாது தடுக்கப்படும்.

ஏ. என். ஸ்ரோங்,
கொழும்புத் துறைமுகச் சங்கத்தலைவர்.

கொழும்பு,
1935 ம் ஆண்டு பெப்ருவரிமீ 6 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.